

# வேங்கடவன் அம்சமடி

**கிளி கண்ணி - ஸ்வாமி தேசிகன்**

www.aradhanam.org

வேங்கடவன் அம்சம்மடி வரதனின் அடிமையடி
அரங்கனுக்கடியானடி கிளியே
எங்கள் ஸ்வாமி தேசிகனடி கிளியே
எங்கள் ஸ்வாமி தேசிகனடி

அப்புள்ளாரின் வம்சமடி அம்மாள் கண்ட செல்வமடி
பரிமுகன் பிரியனடி கிளியே
எங்கள் ஸ்வாமி தேசிகனடி கிளியே
எங்கள் ஸ்வாமி தேசிகனடி

வேதங்களில் சூரரடி வைராக்கிய செல்வமடி
ராமானுஜன் தாசனடி கிளியே
எங்கள் ஸ்வாமி தேசிகனடி கிளியே
எங்கள் ஸ்வாமி தேசிகனடி

கவிகளில் சிங்கமடி கலைகலுக்கு எல்லையடி
கலியனின் கிளிதானடி கிளியே
எங்கள் ஸ்வாமி தேசிகனடி கிளியே
எங்கள் ஸ்வாமி தேசிகனடி

கோதையவள் அன்பனடி பாதுகையின் தொண்டனடி

மணியின் மறுபிறவியடி கிளியே

எங்கள் ஸ்வாமி தேசிகனடி கிளியே

எங்கள் ஸ்வாமி தேசிகனடி

தூப்புல் தந்த தெய்வமடி தூய பக்தி செல்வரடி

அயிந்தையில் அமர்ந்தாரடி கிளியே

எங்கள் ஸ்வாமி தேசிகனடி கிளியே

எங்கள் ஸ்வாமி தேசிகனடி

## ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் திருவடிகளே ஶரணம்